## மக்களுக்குக் கொடுத்தால் அது தி.மு.க. அரசு!


# மக்களிடமிருந்து எடுத்துக்கொண்டால் அது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை,பிப்.24-**

**மக்களுக்கு கொடுத்தால் அது தி.மு.க. அரசு, மக்களிடமிருந்து எடுத்துக்கொண்டால் அது ஒன்றிய பா.ஜ.க. அரசு என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மதுரையில் நடைபெற்ற தி.மு.க. தெற்கு மண்டல வாக்குச் சாவடிக் குழு பயிற்சி மாநாட்டு உரையை சுட்டிக்காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



அவர்கள் சமூக வலைதளப்பதிவு

ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், மக்களுக்கு கொடுத்தால் அது தி.மு.க. அரசு, மக்களிட மிருந்து எடுத்தால் அது ஒன்றிய பா.ஜ.க. அரசு என்று கூறியுள்ளார். திராவிட மாடல் அரசுக்கும், தமிழ்நாட்டில் டப்பா எஞ்சினை ஓட்ட நினைக்கும் பா.ஜ.க. அரசுக்குமான வேறுபாடு இதுதான்! என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.2.2026) கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சி சி.டி.சி.மேடு பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் 9.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி,தூய்மை பணியாளர் நல வாரியத் தலைவர் திப்பம்பட்டி வெஆறுச்சாமி, நல வாரிய துணைத் தலைவர் கனிமொழி, நகராட்சித் தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், துணைத் தலைவர் ச.கௌதமன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

## வடபழஞ்சி எல்காட் பூங்காவில்

# ரூ.150 கோடியில் உலகளாவிய சிறப்பு பொறியியல் மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**மதுரை, பிப்.24-**

**பினாகிள் இன்ஃபோடெக் (Pinnacle Infotech) நிறுவனத்தின் விரிவுப்படுத்தப் பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையக் கட்டடத்தை திறந்து வைத்து மற்றும் பணியாளர்கள் குடியிருப்புக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

மதுரை மாவட்டம், வடபழஞ்சி எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் பினாகிள் இன்ஃபோடெக் (Pinnacle Infotech) நிறுவனம் உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையத்தை (Global Engineering Centre of Excellence) நிறுவியுள்ளது. இந்த மையம் பினாக்கிள் டிஜிட்டல் பொறியியல், கட்டுமானம் மற்றும் டிஜிட்டல் இரட்டை தீர்வுகளுக் கான முதன்மை உலகளாவிய விநியோக மையமாக செயல்படுகிறது. இந்நிறுவனம் 38 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த மையம் மே 2023 அன்று 1800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தொடங்கப்பட்டது.

தற்போது பினாகிள் இன்ஃபோடெக் நிறுவனத்தின் விரிவுப்படுத்தப்பட்ட புதிய உலகளாவிய சிறப்புப் பொறியியல் மையத்திற்கான புதிய கட்டடம் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 1,60,000 சதுர அடி பரப்பளவில் 150 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்த விரிவுப்படுத்தப்பட்ட மையத்தின் மூலம் சுமார் 2,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு, தென் மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு உயர்தரத் தொழில்நுட்ப வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முக்கிய முயற்சியாக இது அமைகிறது.

அதனைத் தொடர்ந்து, 14.30 ஏக்கர் பரப்பளவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் சுமார் 1,200 பணியாளர்கள் தங்குவதற்கான வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள ஊழியர் குடியிருப்புக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**புரிந்துணர்வு ஒப்பந்தம்**

முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில், **எல்காட்** மற்றும் **ஹெச்சி எல் டெக்** நிறுவனங்களுக்கும் இடையே மதுரை, இலந்தைக்குளம் **எல்காட்** சிறப்பு பொருளாதார மண்டலத்தில் 2.41 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் 150 கோடி ரூபாய் முதலீட்டில் **ஹெச்சிஎல்டெக்** நிறுவனம் 1,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க உள்ளது. இது தென் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தும்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், நிதி, சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, அ.வெங்கடேசன், மு. பூமிநாதன், காதர்பாட்சா முத்துராமலிங்கம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவநீத், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கா.ப..கார்த்திகேயன், நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், மதுரை மாநகராட்சி ஆணையர் திருமதி சித்ரா விஜயன், மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் வானதி, கல்லூரி கல்வி இணை இயக்குநர் (மதுரை மண்டலம்) முனைவர் வெ.கலைச்செல்வி, ICT அகாடமி முதன்மை செயல் அலுவலர் வி.ஸ்ரீகாந்த், பினாகிள் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் பிமல் பட்வாரி, இயக்குநர் திருமதி ஸப்னா பட்வாரி, உலகளாவிய தலைவர் டாக்டர் உமா மகேஸ்வரன், HP இந்தியா சேல்ஸ் நிறுவனத்தின் தெற்கு மண்டல விற்பனைத் தலைவர் ஜி.சந்திர மௌலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் வந்துவிட்டதால்,

# வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத்துறையை பா.ஜ.க. பயன்படுத்துவார்கள்!

## தூத்துக்குடியில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!



**தூத்துக்குடி, பிப்.24-**

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம், நடைபெற்ற நிகழ்வில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 76 பயனாளிகளுக்கு ரூ. 77.36 லட்சம் மத்ப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாகனங்களை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வழங்கினார்.**

இந்த நிகழ்வில், தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பி.கீதா ஜீவன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி, அவர்கள் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. வேலூர் மக்களை இன்னும் சந்திக்க வேண்டி உள்ளது. இதனைத் தொடர்ந்து விரைவில் தேர்தல் அறிக்கை வெளியிடப்படும். ஓபிஎஸ் தொடர்பான அறிவிப்பு ஏதும் இருந்தால் அதை முதல்வர் வெளியிடுவார்.

கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தை எப்பொழுதுமே சுமூகமாகத்தான் இருந்திருக்கிறது. ஏனென்றால் நீண்ட நாளாக இருக்கக்கூடிய உறவு. அதோடு கொள்கைக்காக உருவாகி இருக்கக்கூடிய கூட்டணி இந்த கூட்டணி. அதனால் நிச்சயமாக எந்த பிரச்சினையும் இல்லாமல் நடக்கும்.

அமைச்சர் கே.என்.நேரு குறித்த கேள்விக்கு, தேர்தல் வந்துவிட்டால் பா.ஜ.க. ஆரம்பித்து விடுவார்கள். வருமான வரித் துறை, சிபிஐ, அமலாக்கத்துறை ஆகியவற்றை பயன்படுத்திவிடுவார்கள். அதே வேலையை தமிழ்நாட்டிலும் தொடங்கியுள்ளனர் என்று பதிலளித்தார்.



கோவை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேற்று முன்தினம் வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கோவை விமான நிலையத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் கழக துணைப்பொதுச் செயலாளருமான ஆ.இராசா எம்.பி. சால்வை அணிவித்து வரவேற்றார்.

## பூர்த்தி செய்த விருப்ப மனுக்களை தாக்கல் செய்தனர்!

# சட்டமன்றத் தேர்தல் : தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!


## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் கழகத்தினர் குவிந்தனர்!

சென்னை, பிப். 24-

சட்டசபை தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது. மூன்றாவது நாளாக நேற்று முன்தினம் (22.2.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களை பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.





இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20ஆம் தேதி அன்று தொடங்கியது. விருப்பமனு விநியோகத்தை கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகள் தொடங்கி வைத்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதி களுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க.. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.